கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**,** விருதுநகர்

அ.வ.எண்.**274/2023**

வாதி தரப்பு 1 வது சாட்சி **ஸ்ரீதேவி** என்பவரின் வாக்குமூலம் (1869 ம் ஆண்டு சாட்சியசட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஸ்ரீதேவி** | சாதி | |
| கணவர்/ தகப்பனார் பெயர் | விஜயகுமார் | சமயம் | இந்து |
| கிராமம் | இராஜபாளையம் | தொழில் | இல்லத்தரசி |
| தாலுகா | இராஜபாளையம் | வயது | 47 |

நாள் : 24.10.2024

வா.சா.1

முதல் விசாரணை**:** நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் 23.07.2023 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.1. நான் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு 11.12.2023 ம் தேதி வழக்கு அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.2. வழக்கு சொத்தின் கனிணி பட்டா வா.சா.ஆ.3. 15.05.1969 ம் தேதி பிரதிவாதியின் தாயார் பெயரில் உள்ள நன்கொடை ஆவணம் அசல் வா.சா.ஆ.4. வழக்கு அனுமதிக்க வேண்டுகிறேன்.